# LEADERSHIP TRAINING PROVIDED TO STUDENTS AT SCHOOLS AND THEIR RELATIVE PERFORMANCE IN SCHOOL DEVELOPMENT [BATTICALOA ZONE]

MISS. PUSHPARANI ARUMUGAM.

FCM469
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE & MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRI LANKA

2001

## ஆய்வின் சுருக்கம்.

இன்றைய இளம் சமுதாயமான மாணவ சமுதாயமே நாளைய உலகை ஆளப்போகின்றவர்கள். இவர்கள் சிறந்த தலைமைத்துவ ஆளுமைப்பண்பு மிக்கவர்களாக திகழ்ந்தால் நாளைய உலகை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வர். எனவே இவ்வாறான பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளை ஏற்படுத்தும் நோக்குடன் பாடசாலை மாணவதலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி சில சேவை வழங்கும் நிறுவனங்களாலும் கழகங்களாலும் ஒழுங்குபடுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற தலைமைத்துவப் பயிற்சி எவ்வளவு தூரம் பாடசாலை அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்துள்ளது என்பது தொடர்பாக ஆய்வு செய்யுமுகமாக "பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற தலைமைத்துவப் பயிற்சியும் பாடசாலை அபிவிருத்தியில் அதன் பெறுபேறுகளும்." எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக 5 அத்தியாயங்களில் இவ்வாய்வை உள்ளடக்கியுள்ளேன். அவையாவன அறிமுகம், நூலாய்வு, தரவுமுன்வைப்பும் பகுப்பாய்வும், கலந்துரையாடல், முடிவுரையும் சிபார்சுகளும், சம்பந்தப்படுத்தல்களும்ஆகும்.

முதலாம் அத்தியாயமானது இன்றய இளம் சமுதாயமான மாணவர்கள்பற்றியும், அம்மாணவர்களை சிறந்த தலைமைத்துவ ஆளுமைப்பண்புள்ள நற்பிரஜைகளாக உருவாக்கும் நோக்குடன் செயற்படுத்தப்படும் மாணவதலைமைத்துவப் பயிற்சி பற்றிய அறிமுகமும், இப்பயிற்சியின் பெறுபேறுகள் பற்றிய ஆய்வுப் பிரச்சினையும், இவ்வாய்வின் நோக்கமும், அதற்குரிய எண்ணக்கருக்களையும், இந்த ஆய்வினைச் செய்கின்ற போது ஏற்படுகின்ற வரையறைகளையும், எடுத்துக்கொள்ளப்படும் எடுகோள்களையும், விபரிப்பதாக அமைகின்றது.

இரண்டாம் அத்தியாயமானது தலைமைத்துவக் கோட்பாடுகளையும், தலைமைத்துவம் உருவாகும் வழிகளையும், தலைவரின் வகைகளையும், சிறந்த தலைவர்களிடம் இருந்து கிடைக்கப்பட்ட விளைவுகளையும், தலைமைத்துவப் பயிற்சியின் மூலம் எதிர்பார்க்கப்படும் சில விளைவுகளையும், விபரிப்பதாக அமைகின்றது.

மூன்றாம் அத்தியாயமானது தனிப்பட்ட மாறியாய்வான ஆசிரியர், மாணவர் வயதமைப்பு, மறறும் ஆசிரியர் மாணவர் பாலமைப்பு, என்பவற்றுடன் மாணவர் பாடசாலை அபிவிருத்திக் குறிகாட்டிகளான ஒழுங்கு, ஒழுக்கம், ஒற்றுமை, தலைமைத்துவம், சுகாதாரம், தொடர்பாடல், என்பவற்றில் பாடசாலை மாணவர்களது நிலைபற்றி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகளை அட்டவணை உருவப்படம் மூலம்

நான்காம் அத்தியாயத்தில் ஆசிரியர் மாணவர் வயது, பாலமைப்பு, என்பன ஏன் இவ்வாறு காணப்படுகின்றது என்றும், மற்றும் பாடசாலை மாணவர் அபிவிருத்திக் குறிகாட்டிகளான ஒழுங்கு, ஒழுக்கம், ஒற்றுமை தலைமைத்துவம், சுகாதாரம், தொடர்பாடல். என்பன பாடசாலை மாணவர்களிடம் ஏன்குறைவாகக் காணப்படுகின்றது என்றும், ஏன் தலைமைத்துவப் பயிற்சியின் மூலமான பெறுபேறுகள் குறைவாகக் காணப்படுகின்றதென்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், என்போருடன் செய்யப்பட்ட கலந்துரையாடல் ஊடாக விபரிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் அத்தியாயமானது இவ்வாய்வு மூலம் இறுதியாக என்ன சொல்லப்படுகின்றதென்றும் முதலாம் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்ட ஆய்வுக்கான பிரச்சினை ஆய்வின் நோக்கம் என்பதை எண்ணக்கருவாக்கத்தின் மூலம் பதில் தரக்கூடிய வகையிலமைந்த சிபார்சுகளாக அமைகின்றதோடு ஆய்வானது யாருக்கு என்ன வகையில் பயன்படும் என்பதையும் இதுவிபரிக்கின்றது.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | I |
| ஆய்வின் சுருக்கம் | II |
| அட்டவணைப்பட்டியல் | IV |
| உருவப்பட்டியல் | IV |
| பொருளடக்கம் | V |
| அத்தியாயம் 01 | |
| அறிமுகம் | 01 |
| 1.1 ஆய்வுக்குரிய பிரச்சினை | 03 |
| 1.2 ஆய்வுக்கான நோக்கம் | 03 |
| 1.3 எண்ணக்கருவாக்கம் | 04 |
| 1.4 ஆய்வுமுறையும் மதிப்பீடும் | 06 |
| 1.5 வரையறைகள் | 11 |
| 1.6 எடுகோள்கள் | 12 |
| அத்தியாயம் 02 | |
| நூலாய்வு | 13 |
| 2.1 தலைமைத்துவ கோட்பாடுகள் | 14 |
| 2.2 தலைமைத்துவம் உருவாகும் வழிகள் | 25 |
| 2.3 தலைவர்களின் வகைகள் | 26 |
| 2.4 சிறந்த தலைமைத்துவத்திற்கான பண்புகள் | 27 |
| 2.5 சிறந்ததலைவர்களிடமிருந்து கிடைக்கப்பட்ட சில விளைவுகள் | 28 |
| 2.6 தலைமைத்துவப் பயிற்சியால் எதிர்பார்க்கப்படும் சில விளைவுகள் | 31 |
| அத்தியாயம் 03 | |
| தரவுப்பகுப்பாய்வும் முன்வைப்பும் | 36 |
| 3.1 தனிப்பட்ட மாதிரிகள் தொடர்பான பகுப்பாய்வு | 37 |
| 3.2 மாறிகளின் தரவுப் பகுப்பாய்வு | 39 |
| 3.3 மொத்தப் பகுப்பாய்வு | 46 |
| அத்தியாயம் 04 | |
| கலந்துரையாடல் | 48 |
| 4.1 தனிப்பட்ட தரவுகள் தொடர்பான கலந்துரையாடல் | 49 |
| 4.2 மாறிகளின் மீதானவிதந்துரைப்பு | 50 |
| 4.3 மொத்தப் பகுப்பாய்வு தொடர்பான கலந்துரையாடல் (A) | 57 |
| அத்தியாயம் 05 | |
| முடிவுரையும் சிபார்சுகளும் | 59 |
| 5.1 சிபார்சுகள் | 61 |
| 5.2 சம்பந்தப்படுத்தல் | 65 |
| உசாத்துணை நூல்கள் | 66 |
| பின்னிணைப்புக்கள் | 67 |